**தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களிலிருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 18 ஆந் திகதி மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள்,

கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்பட்டிருக்காமை. | 2.4 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2.9 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை. | 2.12 |
| | | 4. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன் முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள் | 2.3.1(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமை. | 1. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்<br>2. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.3.1(அ)<br>2.13.1 (இ), (ஈ) மற்றும் (உ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றமை என்பதும். | இணக்கமின்மை | 2.13 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றன என்பதுவும். | 1. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றது என்பதுவும் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.10(அ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுகின்றமை. | 1. காலதாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | 2.3.1(இ) |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றமை | 1. குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.16 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுகின்றமையும். | 1. நட்டங்களும் சேதங்களும்<br>2. நட்டங்கள் தொடர்பான பொறுப்புக்கள் | 2.7<br>2.6 |

## 2. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

---

(அ) மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களிற்கு கணினி வலையமைப்புக்களை ஏற்படுத்தல், உள்ளக கணனி வலையமைப்பு முறைகளையும் வெளியக வலையமைப்பு முறைகளையும் அறிமுகப்படுத்தல்.

(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் பதவிகளுக்குத் தேவையான வகையில் மத்திய கால பயிற்சிகளை வழங்குதல்.

(இ) யாழ் மாவட்ட உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஏதுவான நிதிசார் நன்மைகளையும் பௌதீக வளங்களையும் பெற்றுக் கொடுத்து அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடல்.

(ஈ) கிராம மட்டத்தில் உள்ள மக்களின் கல்வி, சுகாதாரம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

(உ) தூய பொதுச் சேவைகளை கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வழங்குவதை உறுதிப்படுத்தல். அதாவது பிறப்பு, திருமண மற்றும் இறப்பு பதிவுகளைத் தாமதமின்றி மேற்கொள்ளல்.

(ஊ) அனர்த்த முகாமைத்துவ சேவைப் பிரிவினால் கிராமிய மட்டங்களில் குழுக்களை நியமித்து உடனுக்குடன் திடீர் அனர்த்த நிவாரண சேவைகளை மேற்கொள்ளல்.

(எ) பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதற்கு ஏதுவான வகையில் கலாசார விழாக்களை உரிய காலப் பகுதியில் நடாத்துதல்.

(ஏ) தேர்தல்கள் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள்

---

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட பிரதேச செயலகங்களும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
| --- | --- | --- |
| நெடுந்தீவு பிரதேச செயலகம்<br>தீவகம் தெற்கு பிரதேச செயலகம்<br>காரைநகர் பிரதேச செயலகம்<br>தீவகம் வடக்கு பிரதேச செயலகம்<br>யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்<br>நல்லூர் பிரதேச செயலகம்<br>வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம்<br>வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்<br>வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம்<br>வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம்<br>வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம்<br>தென்மராட்சி பிரதேச செயலகம்<br>வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம்<br>வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்<br>வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களைத் தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல் |

## 2.3 செயலாற்றல்

### 2.3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்

பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவடைய வேண்டிய திகதி | முடிவடைந்த திகதி | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கால தாமதத்திற்கான காரணங்கள் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா மில்லியன் | | | | ரூபா மில்லியன் | |
| ஞானசோதி சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 1.5 | 13.11.2017 | 31.12.2017 | 30.04.2018 | 1.2 | காலநிலை சீரின்மை, மூலப்பொருள் தட்டுப்பாடு |
| மகாத்மாஜீ சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 1.5 | 14.12.2017 | 31.12.2017 | 30.04.2018 | 0.97 | காலநிலை சீரின்மை, மூலப்பொருள் தட்டுப்பாடு |
| உயரப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 1.5 | 13.11.2017 | 31.12.2017 | 30.04.2018 | 0.92 | கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் |
| நல்லூர் சங்கிலியன் நூலகத்தை புனரமைத்தல் | 1.0 | 13.11.2017 | 31.12.2017 | 30.04.2018 | 0.87 | காலநிலை சீரின்மை, மூலப்பொருள் தட்டுப்பாடு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வலிகாமம் தென்மேற்கு ப.நோ.கூ.ச அரிசியாலையை புனரமைத்தல் | 4.95 | 25.11.2017 | 31.12.2017 | 19.06.2018 | 4.9 | கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் |
| மூன்று மாடி நிர்வாகக் கட்டிட நிர்மாணிப்பு பிரதேச செயலகம், நல்லூர் - கட்டம் I | 16.54 | 02.11.2017 | 30.04.2018 | பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | 3.93 | காலநிலை சீரின்மை, மூலப்பொருள் தட்டுப்பாடு |

**(ஆ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

---

மாவட்ட செயலகத்தின் பழைய கட்டிடத்திற்கு மின்னுயர்த்தி நிர்மாணிப்பதற்காக 2017 திசெம்பர் 31 இல் ரூபா 4.815 மில்லியன் மொத்தப் பணமும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 ஜூலை 31 வரை 50 சதவீத வேலைகள் மட்டுமே நிறைவடைந்திருந்தன.

**(இ) காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

---

தாமதமாக செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு

(i) தீவகம் வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள எழுவைதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க வீதி வேலை 6 மாதங்கள் கடந்த நிலையில் ஆரம்பிக்கப்படடுள்ளது.

(ii) தீவகம் வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள அக்கா தங்கை குளம் புனரமைப்பு வேலைகள் 6 மாதங்கள் கடந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 2.4 பெறுகைச் செயன்முறையினூடாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

---

### 2.4.1 கொள்வனவுகளைத் திட்டமிடுதல்

---

மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செயற்பாட்டின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 120.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 120.8 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த நிதி தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவு திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) கொள்வனவு திட்டங்கள் மற்றும் ஆரம்ப நிலை**

---

இந்தக் கட்டத்தின் கீழ் கீழ்வரும் திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பிரதான கொள்வனவுத் திட்டம்

(ii) கொள்வனவுப் பொதியின் சுருக்கம்

(iii) ஆரம்பக் கொள்வனவுத் திட்டம்

(iv) இனங்காணப்பட்ட கொள்வனவுடன் தொடர்பான விசேட அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

(v) விதந்துரைப்புகள், திட்டமிடல், அடிக் குறிப்புகள், நிர்மாணங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி

**(ஆ) ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்**

இந்தக் கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஒவ்வொரு ஒப்பந்த தொகுதி மற்றும் கொள்வனவுக் கால உப அட்டவணைகள் (கொ.கா.அ)

(ii) வேலை, பொருட்கள் மற்றும் சேவை தொடர்பான விரிவான கொள்வனவுத் திட்டம்

(iii) மதியுரை சேவைகளுக்கான விரிவான கொள்வனவுத் திட்டம் (புறம்பானதொரு திட்டமாக)

**(இ) ஒப்பந்தத்தின் பின்னரான (ஒப்பந்த நிர்வாக) கட்டம்**

இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஒப்பந்த நிர்வாகத் திட்டம்

(ii) ஒப்பந்த நிர்வாகத் திட்டத்துடன் இணைந்த காசுப் பாய்ச்சல் திட்டம்

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கீழ்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் 41 வாகனங்கள் காணப்பட்டதுடன், அவ்வாகனங்கள் 645,850 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்காக ரூபா 8.131 மில்லியன் தொகையும் வாகனங்களை சேவை புரிவதற்காக ரூபா 2.443 மில்லியன் தொகையும் வாகன திருத்த வேலைகளுக்காக ரூபா 8.616 மில்லியன் தொகையும் வாகன காப்புறுதிக்காக ரூபா 2.084 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 21.275 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்கள் என்பவற்றால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்தியமைக்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 32.94 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு, சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | கூறுகளின் எண்ணிக்கை | பெறுமதி | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------ | ----------- | -------------------- |
| | | | ரூபா. மில்லியன் | |
| (i) | கட்டிடங்கள் | 02 | 8.50 | 1 – 5 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 11 | 8.69 | 1 – 7 |
| (iii) | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 06 | 1.24 | 1 – 3 |
| (iv) | அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் | 150 | 0.44 | 1 |
| | | | 18.87 | |
| | | | ========= | |

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

மாவட்ட செயலகத்தினால் முறைப்படி சொத்துக்கள் கையேற்கப்படாமல் அச்சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

நல்லூர் மற்றும் காரைநகர் பிரதேச செயலகங்களிற்கான முறையே ரூபா 36.470 மில்லியன் மற்றும் ரூபா 58.144 மில்லியன் பெறுமதியான அலுவலகக் கட்டிடங்கள் தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரிமைத்துவம் 2018 ஜுலை 31 வரையிலும் செயலகத்தால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

மாவட்ட செயலகத்தினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத 21 பொறுப்புக்களாக ரூபா 0.923 மில்லியன் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.7 நட்டங்களும் சேதங்களும்**

16 ஆண்டுகள் தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் இருந்து பல்வேறு காரணங்களினால் ரூபா 2.403 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

**2.8 தீர்வுசெய்யப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுடன் தொடர்புபடுத்தி கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.5 | 26401 ஆம் இலக்க அரசாங்க உத்தியாகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 0.246 மில்லியன் தொகையான நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.6 அ | காரைநகர் பிரதேச செயலகத்திற்கான அலுவலகக் கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் உரிமைத்துவம் 2017 செப்தெம்பர் 30 வரையிலும் செயலகத்தால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத்தின் பெறுமதியை தீர்மானிப்பதற்கு தொடர்புடைய கோவைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |
| 2016 | 3.6 ஆ | நான்கு மோட்டார் வாகனங்கள் 02 தொடக்கம் 06 வரையான ஆண்டுகளிற்கிடையில் பயனற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் 24 மோட்டார் சைக்கிள்கள் 06 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| 2016 | 3.10 | அனலைதீவு குடியிருப்பு வீதியை புனரமைப்பதற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 0.416 மில்லியன் பெறுமதி சேர் வரி (**VAT**) செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்படி வற் கொடுப்பனவு ஒப்பந்ததாரரால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. பின்னர் குறித்த ஒப்பந்ததாரரின் வற் பதிவு செயற்பாட்டில் இல்லை என இறைவரி திணைக்களம் அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் ரூபா 0.194 மில்லியன் தொகையான மேற்படி வேலையின் நிறுத்தி வைத்தல் பணம் வற் கொடுப்பனவின் பகுதியை |

| | | |
|---|---|---|
| | | தீர்ப்பதற்காக வருமானக் கணக்கிற்கு அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 வரையில் ஒப்பந்ததாரர் அல்லது பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து மிகுதியாகவுள்ள ரூபா 0.222 மில்லியன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.11 | 15 ஆண்டுகள் தொடக்கம் 29 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியிலிருந்து பல்வேறு காரணங்களினால் ரூபா 2.4 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. |
| 2016 | 3.13 அ | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரகாரம், லீற்றரொன்றிற்கான தாரின் விலை ரூபா 60 ஆக காணப்பட்ட போதிலும் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக லீற்றரொன்றிற்கு ரூபா 70 விலைவீதத்தில் ஒப்பந்ததாரர்களிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக 146 சந்தர்ப்பங்களில் ரூபா 2.442 மில்லியன் தொகை ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

**2.9 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் மாவட்ட செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 563.944 | 563.517 | 0.427 | 0.076 |
| | மூலதனம் | 44.850 | 44.617 | 0.233 | 0.520 |
| | **மொத்தம்** | **608.794** | **608.134** | **0.660** | **0.108** |
| 2014 | மீண்டெழுபவை | 517.650 | 515.013 | 2.637 | 0.509 |
| | மூலதனம் | 33.000 | 32.879 | 0.121 | 0.366 |
| | **மொத்தம்** | **550.650** | **547.892** | **2.758** | **0.501** |
| 2015 | மீண்டெழுபவை | 653.990 | 649.340 | 4.650 | 0.711 |
| | மூலதனம் | 77.650 | 77.649 | 0.001 | 0.001 |
| | **மொத்தம்** | **731.640** | **726.989** | **4.651** | **0.636** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2016 | மீண்டெழுபவை | 688.866 | 686.019 | 2.847 | 0.413 |
| | மூலதனம் | 108.034 | 108.034 | 0.000 | 0.000 |
| | **மொத்தம்** | **796.900** | **794.052** | **2.848** | **0.357** |
| 2017 | மீண்டெழுபவை | 687.984 | 686.897 | 1.087 | 0.158 |
| | மூலதனம் | 120.787 | 120.786 | 0.000 | 0.000 |
| | **மொத்தம்** | **808.770** | **807.683** | **1.087** | **0.134** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை**

18 செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 17.09 மில்லியன் மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளில் மொத்தம் ரூபா 68 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதிஏற்பாட்டின் 12 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டிருந்த அதே நேரம் ஏனைய 07 மீண்டெழும் நிதியேற்பாடுகளிலும் 04 மூலதன நிதியேற்பாடுகளிலும் 32 சதவீதம் தொடக்கம் 127 சதவீதம் வரை நிதிப்பிரமாணம் 66 இற்கமைவாக அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆகையால் நிதித் திட்டமிடல் இல்லாமல் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததை இது வெளிப்படுத்தியிருந்தது.

**(ii) பிற அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்**

பல்வேறு பணிகளுக்காக 33 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 21 திணைக்களங்களால் ரூபா 5,495.508 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 4,684.028 மில்லியன் மற்றும் ரூபா 67.555 மில்லியன் எனுமாறு ரூபா 4,751.583 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 738.383 மில்லியன மற்றும் ரூபா 5.542 மில்லியன எனுமாறு ரூபா 743.925 மில்லியன் கூட்டுத்தொகையான சேமிப்பு அல்லது வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் முறையே 13.62 சதவீதத்திற்கும் 7.58 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவினாலான சேமிப்பைக் கொண்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 சதவீதத்திற்கு மேற்பட்ட 25 எண்ணிக்கையான சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 738.287 மில்லியன் தொடர்பில் விளக்கங்கள் கணக்காய்விற்கு கிடைக்கத்தக்கனவாயிருந்திருக்கவில்லை.

(ஆ) செலவின மதிப்பீடு முறையான திட்டமிடலின்றி தயாரிக்கப்பட்டமையால் 41 தொடக்கம் 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் ரூபா 320.956 மில்லியன் ஏழு செலவு விடயங்களில் ஏற்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) பொருளாதார பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ONUR) மணற்காடு மீன்சந்தை கட்டட அமைப்பு வேலைகான ரூபா 507,256 மேலதிக கொடுப்பனவு அந் நிர்மாண வேலையின் 15 விடயங்களில் ஏற்பட்ட தவறான கணிய அளவீடுகளினால் ஏற்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்கு உரிய 26401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | உச்ச எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 65.000 | 64.983 | 46.000 | 46.734 | 200.000 | 139.816 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிலுவையான கடன் மீதிகளை அறவிடாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த சேவை வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.246 மில்லியன் ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதி 02 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

## 2.11 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 249.567 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்கள் கடந்த நிலையில் கூட்டுமொத்தம் ரூபா 1.722 மில்லியன் பெறுமதியான 37 பிடிபண வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 பிரதேச செயலங்களிற்கு வட மாகாண கலாச்சார திணைக்களம் மற்றும் இந்து கலாச்சார திணைக்களங்களினால் கலாச்சார நிகழ்வுகள் மற்றும் ஆலய திருத்த பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1.631 மில்லியன் தொகையான பணம், குறித்த பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வாகன நிரற்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.13 இணக்கமின்மை**

**2.13.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | ---------------------------------- | -------- | ------------------ |
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் ------------------------------------- | | |
| | நிதி ஒழுங்கு விதி 371(2) | 550,000 | பொருட்கள் சேவைகள் கிடைப்பனவிற்கு முன்பாக 02 அனுமதிக்கப்பட்ட சங்கங்களுக்கு கட்டுநிதி முற்பணம் வழங்கப்பட்டமை. |
| | நிதி ஒழுங்கு விதி 137 மற்றும் 138 | 64,639,266 | பொருட்கள் சேவைகளை பெற்றுக் கொள்ள முன்னர் 2017 ஆம் ஆண்டு 225 எண்ணிக்கையான காசோலைகள் வரையப்பட்டு மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பில் வைத்திருக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 31 மார்ச் 2018 வரை பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படாததுடன் இக் காசோலைகள் மாற்றப்படாத காசோலை பட்டியலில் காணப்பட்டுள்ளன. |
| (ஆ) | திறைசேரி சுற்றறிக்கை ---------------------------- | | |
| | 24 பெப்ரவரி 2004 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்கம் | - | மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சுற்றறிக்கை ------------------------------------- | | |
| | 2017 மே மாத சமுதாய அடிப்படை/02/2017/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(v) ஆம் பந்தி | - | கொடி மற்றும் ஸ்ரிக்கர்கள் வழங்கும் போது பயனாளிகளிடம் கட்டாயமாக ரூபா 500 இற்கு குறைவான தொகை உண்டியல் இடப்படக்கூடாதென்ற நிபந்தனையடிப்படையில் ஒவ்வொரு பயனாளியிடமிருந்தும் ரூபா 500 சேகரிக்கப்பட்டமை முரணானதாக அவதானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| | 2016 ஏப்ரல் மாத 06/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | 374,000 | இரத்தாகிய சுற்றறிக்கைக்கு அமைவாக வேறுபாடாடுடைய முத்திரை வெட்டப்படுவதுடன் தொடர்ச்சியான கால தாமத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் 187 பயனாளிகளுக்கு போசாக்கு கொடுப்பனவு முத்திரைகள் வெட்டப்பட்டுள்ளதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தின் பூரண நன்மையை பயனாளிக்கு பெற்றுக் கொடுக்க தவறியமை நல்லூர் மற்றும் தீவகம் தெற்கு பிரதேச செயலகங்களில் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது. |
| (உ) | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்<br>---------------------------------------- | | |
| | 2016 பெப்ரவரி 16 ஆம் திகதிய JF/MRS/RES/01/Gen/2016 ஆம் இலக்க கடிதம் | 2,242,800 | ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் வாழ்வதாதார உதவியின் ஆகக் கூடிய பெறுமதி ரூபா 100,000 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும் அவ் அறிவுறுத்தலுக்கு முரணாக காரைநகர் பிரதேச செயலகத்தால் 28 பயனாளிகளுக்கு ரூபா 18,900 பெறுமதியான வாழ்வாதார உதவி ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| | 2015 யூலை 07 ஆம் திகதிய DB/GPS/130/9/14/MC-II ஆம் இலக்க 2014/2015 வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்தல் - வெளிக்கள அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்குதல் பற்றிய பொது வழிகாட்டுதல் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 1,001,640 | மோட்டார் சைக்கிள் பெறுவதற்கு உரித்தற்ற பதவிகளிற்கு மாற்றலாகி சென்ற போதும் தீவகம் தெற்கு மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தை சேர்ந்த 07 உத்தியோகத்தர்களால் உரிய தொகை நாளதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை |

## 2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.14.1 இணைப்புச் செய்யப்பட்டுள்ள பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 602.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 328,113 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 77 | 63 | 14 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 63 | 20 | 43 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1722 | 1554 | 180 | 12 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 211 | 200 | 22 | 11 |
| | | **2073** | **1837** | **259** | **23** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 259 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருந்தமானவாறு திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 23 மிகை ஆளணியினரை தேவையான இடங்களுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.15 நிதிக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய பணிகளை ஒப்படைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நிதி அதிகாரங்களை ஒப்படைக்கும் போது அவ்வாறு ஒப்படைக்கும் உத்தியோகத்தரின் பெயரில் அல்லது பதவியில் அல்லது குறிப்பாக நிர்ணயித்து அந்தந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை காட்டும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடு பொதுவாக மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.16 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

---

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்காமையால் அவர்களது தவறுகளால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடு செய்யக்கூடிய வகையில் முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொள்ள மாவட்டச் செயலாளர் தவறியிருந்தார்.